பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 22 | புதன்கிழமை | 08.11.2023 | அதிர்வு 99

## மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு சொல்கிறார் டக்ளஸ்

(ஏ.ஜே. சார்ள்ஸ்)

"இந்திய – வடக்கு தமிழ் மீனவர்களின் பிரச்சினை தீர வேண்டுமானால் இங்குள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்று வடக்குக் கடற்பரப்பில் நடப்பது இலங்கைக் கடற்படையின் பிரச்சினை அல்ல அங்கு நடப்பது 08

# டக்ளஸ் – கஜேந்திரன் கடும் சொற்போர்!

## சபைக்கு உதவாத வார்த்தைகள் தாராளம்



(ஏ.ஜே. சார்ள்ஸ்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சபையில் கருத்துக்களை முன்வைத்தபோது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அவரது கட்சி எம்.பியான கு.திலீபனும் இடையூறுகளை ஏற்படுத்தியதால் இரு தரப்புக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன்போது இரு தரப்பாலும் சபைக்கு உதவாத வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்று கடற்றொழில் நீரியல் வள 08

# தேரரை நாடாளுமன்றம் அழைத்து விசாரிக்குக!

## இல்லையேல் இன நல்லிணக்கம் சீர்குலையும் என்று இரா.சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை

– சீ.ஏ. தமிழ்மாறன் –

**"தெற்கில் வாழும் ஒவ்வொரு தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டுவேன் எனப் பகிரங்கமாகக் கூறிய மட்டக்களப்பு - மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த நாட்டில் இன நல்லிணக்கம் சீர்குலையும்."** 06



# மன்னாருக்குச் சீனத் தூதுவர் குழு விஜயம்

## மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு




(மன்னார் நிருபர்)

சீனாவில் உள்ள பௌத்த மக்களின் உதவியுடன் இலங்கையில் வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை மன்னார் – வங்காலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 450 மீனவக் குடும்பங்களில் முதல் கட்டமாக 50 குடும்பங்களுக்கு உலர் 08

# 10 மனுக்களும் 'அவுட்'

## உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பு



(சுடர் திலீபன்)

நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாத உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசமைப்புக்கு முரணானதா அல்லது முரணற்றதா என்று ஆராயும் 06




'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பார்கள்.

அதுபோல சீனிக்கு வரி விதித்தாலும் ஊழல். வரி விலக்கினாலும் ஊழல் என்றாகிவிட்டது இலங்கை நிலைமை.

கோட்டாபய காலத்தில் சீனி ஊழல் ஒருவிதத்தில் என்றால், அதற்கு மறுவளத்தில் ரணில் காலத்தில் அதே ஊழல்.

கோட்டாபய காலத்தில் சில வர்த்தகர்களின் சீனிக் கப்பல்கள் கொழும்புத் 06

# மன்னாரில் சீனாவின் உதவித் திட்டம்








சீனாவில் உள்ள பௌத்த மக்களின் உதவியுடன் இலங்கையில் வாழும் வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை மன்னார் – வங்காலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- மன்னார் நிருபர்)









CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230


Swami Vivekananda Cultural Centre,
High Comission of India, Colombo.
2nd
PRATHIBHA SANGAM
Competition
Categories of Competition
Indian Dance
Bharatanatyam
Kathak
Odissi
Hindusthani Music
Instrumental Music
Vocal
Carnatic Music
Instrumental Music
Vocal
Starting Date: 05.10.2023 (10.00 am IST)
Closing Date: 10.11.2023 (6.00 pm IST)
Competition Timelines
Winners to be announced in the month of November/ December 2023
For registration and guidelines
Awards & Prices
A Certificate | Cash Prizes
Cash prizes
for three winners in each genre
$500 $350 $250
Winners shall be invited to perform in India.
Swami Vivekananda Cultural Centre,
16/2, Gregory's Road, Colombo - 00700


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.05, 19th Lane. Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES
40 Years Housing Excellence
+94 777 546 546
+94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
துறைமுகத்திற்கு வந்து தரித்த போது, சீனிக்கான வரி திடீரென்று ஐம்பது ரூபா குறைத்து அதிரடியாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி ஆக 25 சதம் மட்டுமே ஒரு கிலோ சீனிக்கான வரியாக அமைந்தது.

ஆனால் வரி விலக்கப்பட்டமையை அடுத்து சந்தையில் சீனியின் விலையை அதற்கேற்ப குறைக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவே இல்லை. எனவே, கப்பலில் சீனியைக் கொண்டு வந்து இறக்கியவர்கள் அந்த வரியை அரசுக்கு செலுத்தாமலேயே, பழைய விலைக்கே சீனியை விற்றனர். கிலோவுக்கு ரூ.50 மேல் அதிகமாக சுளையாகச் சுருட்டினர். இந்த ஊழலில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 1,600 கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டது.

இப்போது சீனிக்கு கிலோவுக்கு 25 சதமாக இருந்த வரியை திடீரென 50 ரூபாவால் கூட்டி அறிவிப்பு வெளியிடப்பட்டது. உடனே சந்தையில் சீனியின் விலை அதற்கு ஏற்ப கூட்டப்பட்டது. என்னவென்று தேடிப் பார்த்தால், அதே வர்த்தகர்கள் சிலர் 22 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியை கிலோவுக்கு வெறும் 25 சதம் வரியுடன் இறக்கி, சுங்கத்தை பொருள்கள் தாண்டிய கையோடு, ஐம்பது ரூபா வரி விதிக்கப்பட்டிருக்கின்றது.

இனி என்ன? 50 ரூபாய் வரி செலுத்தாத 22 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியையும் இப்போதைய – கூடிய – புதிய – விலைக்கு விற்று, அந்த வர்த்தகர்கள் ஆயிரம் கோடி ரூபா மேலதிகமாகச் சுருட்டிக் கொள்வர். அது அரசுக்கு வரி இழப்பாகும்.

கடந்த மாதத்திற்கு முந்திய மாதம் வரை மாதம் சராசரி ஆயிரம் தொன் சீனி இறக்கிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர், கடந்த மாத இறுதியில் 8 ஆயிரத்து 600 தொன் சீனியைத் தருவித்து, கப்பலில் இருந்து இறக்கி, துறைமுகத்திலிருந்து சீனி லொறிகள் 'கிளியரான' கையோடு, ஐம்பது ரூபா வரி விதிப்பு அறிவிப்பு வந்திருக்கின்றது.

சீனிக்கு விசேட பாவனைப் பொருள் வரி விதிக்கப்பட இருப்பது பற்றிய தகவல் அமைச்சரவைக்கு தெரியப்படுத்தப்பட முன்னரே சில வர்த்தகர்களுக்குத் தெரிந்திருந்தமை எங்ஙனம் என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு பணியாளர் விவகார அமைச்சர் மனுஷ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

இவ்விடயம் குறித்து நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவில் கேள்வி எழுப்பப்படும் என அக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம்.பி. கூறியிருக்கிறார். 50 ரூபா வரி அறிவிக்கப்படுவதற்கு சற்று முன்னர் – வழமைக்கு மாறாக – சீனியைப் பெருந்தொகையில் இறக்குமதி செய்து துறைமுகத்தை விட்டு களஞ்சியசாலைகளுக்கு வெளியேற்றிய பிரகிருதிகளின் முழு விவரங்களையும் ஹர்ஷ டி சில்வா வெளியிட்டிருக்கிறார் என்றும் தெரிகின்றது.

ரணிலின் ஆட்சியும், கோட்டாபயவின் ஆட்சிக்குச் சளைத்தது அல்ல என்பதுதான் நிலைமை.

## தேரரை நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தபோதே மேற்கண்டவாறு எச்சரித்த சாணக்கியன் எம்.பி., மேலும் தெரிவிக்கையில்,

"மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்தில் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸார் அமுல்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி நான் கடந்த மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றினேன். அந்த உரையைச் சுட்டிக்காட்டி மட்டக்களப்பு – மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்தக் காணொலியில் நான் குறிப்பிட்ட விடயங்களைத் திரிபுபடுத்தும் வகையில் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நான் நாடாளுமன்றத்தில் பேசும்போது என்னைத் தடுக்க அங்கு முதுகெலும்புள்ள சிங்கள எம்.பி.க்கள் எவரும் இல்லையா என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேரரின் கருத்துக்களால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

அத்துடன் தெற்கில் வாழும் ஒவ்வொரு தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டுவேன் எனவும் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் பகிரங்கமாக எச்சரித்துள்ளார். இது பாரதூரமானது. எனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறிய இவர், எனது இன மக்களையும் அச்சுறுத்தியுள்ளார். ஆகவே, இவரை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டும். இல்லாவிடின் இந்த நாட்டில் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும்." – என்றார்.

## 10 மனுக்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிகாரம் இல்லாத காரணத்தால் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட 10 மனுக்களின் விசாரணைகளை நிறைவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடிய நிலையில் இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போதே இந்த விடயத்தை சபைக்கு அறிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 2023.10.03 ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை. அரசமைப்பின் 121 (3) அத்தியாயத்தின் பிரகாரம் இந்தச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாத ஒரு சட்டமூலத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் அதிகாரம் இல்லாத காரணத்தால் தாக்கல் செய்யப்பட்ட 10 வழக்குகளின் விசாரணைகளை நிறைவுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது." – என்றார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இந்தியாவா? வேறு தரப்புகளா?

சீனத் தூதர் வடக்கே வந்து இன்று திரும்புகின்றார். இங்கு சில செய்திகளை அவர் பூடகமாக விட்டுச் செல்லவும் தவறவில்லை.

பூகோள அரசியலைத் தமிழர் தரப்பு தேர்ந்து கையாள வேண்டிய ஒரு சூழல் வந்திருக்கின்றது.

யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலைமை. தமிழரின் அவல வாழ்வு தொடர்கின்றது. தீர்வும் இல்லை. அபிவிருத்தியும் இல்லை. தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையும் இல்லை.

தமிழர்களின் விடுதலைப் போருக்கு எதிராக இலங்கை அரசுக்கு சீனா ஆயுத உதவிகளை வழங்கியது. ஆகவே அதனை (சீனாவை) அரவணைக்கோம் என்று சீனா தொடர்பில் வடக்கில் சில தரப்புகள் கூக்குரலிடுகின்றன.

ஏதோ தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதில் இந்தியா சம்பந்தப்படாதமை போன்று பலர் பேசுகின்றனர். முள்ளி வாய்க்கால் வரை இலங்கை முனைப்புடன் யுத்தத்தை முன்னெடுத்து முடிப்பதற்கான இராஜதந்திரக் கவசத்தை வழங்கியதே இந்தியாதான். இப்போதும் அதை வழங்கிக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளை ஊடுருவி ஆராய்ந்தால் அதனைப் பார்த்து 'யூ டூ புரூட்டஸ்?' என்றுதான் தமிழர்கள் கேட்க வேண்டியிருக்கும்.

இதில் சீனா வேறு, இந்தியா வேறு என்று பிரித்துப் பார்ப்பதற்கு தமிழருக்கு எதுவும் இல்லை என்பது தான் உண்மை.

யுத்தத்தின் பின்னராவது இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா நேர்மையுடன் ஏதாவது தீர்வைப் பெற்றுத்தர முயன்றதா என்றால் விடை பூச்சியம்தான்.

தான் கையெழுத்திட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையே நடைமுறைப்படுத்தச் செய்ய லாயக்கில்லாத இந்தியா, அது குறித்து சாக்குப் போக்குச் சொல்லியபடி கொழும்பைத் தாஜா செய்வதிலேயே காலம் கழிக்கின்றது. கேட்டால் தமிழர் தரப்பு ஒற்றுமையாக இல்லை என்று சளாப்பல் கதை வேறு. ஏதோ தமிழர் தரப்புகள் எல்லாவற்றையும் ஒற்றுமைப்படுத்தி வைத்து, அந்தப் பின்புலத்தில்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை புதுடில்லி செய்த மாதிரி நினைப்பு. அப்படி நடக்கவில்லையே..! பிறகு அந்த ஒப்பந்த வாசகத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதற்கு மட்டும் ஏன் தமிழர் தரப்பின் ஒற்றுமை குறித்து இந்தியா பேச வேண்டும்?

இந்தியாவின் தயவிலேயே தங்கி நிற்கும் தமிழ் தலைவர்களால், தமிழ் மக்களுக்கு ஏதும் பெற்றுத் தர முடியவில்லை என்பதுதான் நிஜம். இனியும் அதுதான் தொடரும்.

பௌத்தர்களுக்கு பின்னாலும் அணிவகுப்பதை இந்துத்துவா கொள்கை என்று கருதும் பாரதிய ஜனதா கட்சியினர், இலங்கைத் தமிழர்களுக்கு 'கௌரவமான தீர்வைப் பெற்றுக் கொடுப்போம்' - என்ற பல்லவியைத் திரும்பத் திரும்ப கீறல் விழுந்த றெக்கோர்ட் மாதிரிப் பாடுவார்களே தவிர, கொழும்பைப் பகைத்துக் கொள்ளவும் மாட்டார்கள், தமிழருக்கு ஏதும் பெற்றுத்தரவும் மாட்டார்கள். தமிழ்த் தலைவர்களை பற்றி கவலைப்படவும் மாட்டார்கள். பெரும்பாலான தமிழ்த் தலைவர்களும் கூட இந்தியத் துதி பாடுவதை விட்டு வெளியே வரவும் மாட்டார்கள்.

யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகியும் ஏதும் செய்ய முடியாத - செய்ய லாயக்கற்ற - இந்தியாவை மட்டும் தொடர்ந்து தமிழர்கள் நம்பி இருப்பதா அல்லது அந்த மாயையை விட்டு வெளியே வந்து வேறு வழிகளை - புதிய ஆதரவுத் தளங்களை - பூகோள அரசியல் பின்னணியில் நோக்குவதா என்று முடிவு செய்ய வேண்டிய காலகட்டம் தமிழர்களுக்கு வந்து விட்டது.

வடக்கே வந்த சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் வைத்து கூறிய ஒரு கருத்து நோக்கப்பட வேண்டியிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கி, அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கென தமிழகத் தொப்புள் கொடி உறவுகள் அத்தியாவசியப் பொருள்களைச் சேகரித்து கப்பல்களில் அனுப்பினர். அவற்றை வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு என்று பிரித்துக் கொடுக்க முடியவில்லை. முழு இலங்கையருக்கும் கொடுக்க வேண்டியிருந்தது.

இந்தப் பின்புலத்தில் சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் கூறிய ஒரு கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. "சினோபாம் தடுப்பூசிகளை சீனா இலங்கைக்கு வழங்கியது. அவற்றில் கணிசமானவை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அப்போது நானே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தேன். இந்தத் தடுப்பூசிகளில் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை வடக்கு - கிழக்கு மக்களுக்கு முழுமையாக முன்னுரிமை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும், எஞ்சியவையே பிற மாகாணங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் அவரிடம் நேரில் நிபந்தனையாகக் கூறியிருந்தேன். கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணியில் சுமார் 70 வீதமானவற்றை நாமே (சீனாவே) இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கினோம். வடக்கு - கிழக்கு மாணவர்கள் அனைவருக்கும் அவை முன்னுரிமை அடிப்படையில் முழுமையாக முதலில் வழங்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சரிடம் ஒவ்வொரு தடவையும் நேரில் நான் கூறியிருக்கிறேன்." - என்று சீனத் தூதுவர் யாழில் குறிப்பிட்டு இருக்கின்றார்.

இதன் அர்த்தம் இந்தியாவைத் துறந்து நாம் சீனா பக்கம் செல்ல வேண்டும் என்பதல்ல.

இந்தியா இனியும் தன் பொறுப்பை - தனது கடப்பாட்டை - முழு அளவில் உணர்ந்து வெளிப்படையாக விரைந்து செயல்பட முன்வராவிட்டால், தமிழ் தலைவர்களைக் கையில் போட்டுக்கொண்டு தன் காரியத்தை தான் பார்க்கலாமென்று அது கருதி செயற்படுமானால், பயனற்ற இந்தியாவின் பின்னால் பயணித்து ஏமாறுவதை விடுத்து, பயனுள்ள பிற வழிகளையும் தமிழ்த் தலைவர்களைத் தாண்டி, தமிழ் மக்கள் சிந்திக்கத் தலைப்பட வேண்டும். அதுவே காலம் நம் முன்னால் வைத்திருக்கும் கட்டாயமாக உள்ளது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."
-லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)



# கிரிக்கெட் நிறுவனத்தின் பணிகளை மீளப் பொறுப்பேற்றார் ஷம்மி சில்வா

மேன்முறையீட்டுநீதிமன்றம்வழங்கிய இடைக்கால உத்தரவு காரணமாக அர்ஜுன ரணதுங்க இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தை விட்டுச்செல்ல நேரிட்டுள்ளது.

இந்த நிலையில், தலைவர் ஷம்மி சில்வா மீண்டும் அதன் பணிகளைப் பொறுப்பேற்றார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவொன்று நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை அடுத்து, இடைக்கால நிர்வாக சபையின் நடவடிக்கைகளை 14 நாள்களுக்கு இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை சட்டத்தின் 32 ஆவது மற்றும் 33 ஆவது சரத்துக்களின் பிரகாரம், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவை இடைநிறுத்தி கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அதிவிசேட வர்த்தமானியொன்றை வெளியிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்தை இடைக்கால நிர்வாக சபையின் கீழ் கொண்டு வந்தார்.

மறு அறிவித்தல் வரை அல்லது தேர்தல் நடத்தப்படும் வரை அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த இடைக்கால நிர்வாக சபைக்கு மேலும் ஆறு உறுப்பினர்கள் பெயரிடப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை விளையாட்டுத்துறை அமைச்சரை சந்தித்த அர்ஜுன ரணதுங்க, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்குச் சென்று பணிகளை ஆரம்பித்தார்.

இதேவேளை, கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி அறிந்திருக்கவில்லை என ஜனாதிபதியின் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரை அழைத்து ஜனாதிபதி இது தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார்.

இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் தீர்மானத்தை மீளப்பெறத் தவறினால் விளையாட்டுத்துறை சட்டத்தை தமது பொறுப்பின் கீழ் கொண்டு வருவேன் என்று ஜனாதிபதி கூறினார் என்று அமைச்சர் ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

## மீனவர்கள் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை வடக்கு தமிழ் மீனவர்களின் பிரச்சினை என்று சொல்வார்களாக இருந்தால் இந்திய – வடக்கு தமிழ் மீனவர்களின் பிரச்சினை விரைவில் தீரும்."

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளை எமது கடற்பரப்பில் ஒரு விநாடி கூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் தன்னுடைய நிலைப்பாடு என்றும் அவர் கூறினார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழில் நீரியல் வளச் சட்ட மூலத் திருத்தம் தொடர்பான விவாதத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது:–

"கடற்றொழில் அமைச்சு என்ற வகையில் நாம் மேற்கொள்ளும் சட்ட திருத்தங்கள் மீனவர்களின் நிகழ்கால, எதிர்கால நன்மை கருதியதாகவே இருக்கும். அடிப்படையில் எமது கடல் வளங்களைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். கடல் வளங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். கடற்றொழிலாளர்கள் கடலைப் பாதிக்கும் தொழிலை முன்னெடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்பில் நானும் இணங்குகின்றேன். நானும் அதில் மிகவும் தீவிரமாக இருக்கின்றேன். ஆனால், அது தொடர்பில் பிரதமரோ அல்லது வெளிவிவகார அமைச்சரோ அதனை ஏற்றுக் கொண்டு சொன்னதாக எனக்கு ஞாபகத்தில் இல்லை. இந்திய இழுவைப் படகுகளை எமது கடற்பரப்பில் ஒரு விநாடி கூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

இந்தியாவில் தேர்தல் நடக்கவிருப்பதால் கச்சதீவு தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியாக அங்கு கருத்துக்கள் சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். 74 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு உடன்படிக்கையால் நாம் 80 வீதமான கடல் வளங்களை இந்தியாவுக்குத் தாரைவார்த்து விட்டோம்.

முன்னர் தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் வடக்கு, கிழக்கு கடற்பகுதிகளில் இருந்திருக்கலாம். ஆனால், தற்போது அப்படி இல்லை. அப்படி இருந்தால் நீங்கள் என்னுடைய கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். அதேநேரத்தில் வடக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு இந்தப் பிரச்சினை இலங்கைக் கடற்படையின் பிரச்சினை அல்ல் அங்கு இருப்பது இலங்கைத் தமிழ் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை என்று சொல்வார்களாக இருந்தால் அந்தப் பிரச்சினை விரைவில் தீரும் என்றும் நம்புகின்றேன்." – என்றார்.

## டக்ளஸ் - கஜேந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டமூல திருத்தம் தொடர்பான விவாதம் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன், வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள், வடக்கு மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் மீன்பிடித்துறை முகங்கள் செயற்படாமை போன்ற பல பிரச்சினைகளை முன்வைத்துக்கொண்டிருந்தார்.

இதன்போது எழுந்த கடற்றொழில் அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, "இங்கு பொய்களைக் கூற வேண்டாம். அரசியல் செய்ய வேண்டாம். மீனவர்களுக்குப் பிரச்சினை இருந்தால் அந்தப் பிரச்சினைகள் என்னவென்று கூறுங்கள் பார்க்கலாம்" – என்று தெரிவித்தார்.

இதையடுத்து வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளைக் கஜேந்திரன் எம்.பி. அடுக்கிக்கொண்டு போனார். இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரது கட்சி எம்.பி.யான திலீபனும் குறுக்கீடுகளைச் செய்தனர். "மீனவர்களின் பிரச்சினைகளைக் கூறுமாறு கூறிவிட்டு நீங்களும் உங்களது அடியாளும் கூச்சலிட்டால் நான் எவ்வாறு கூறுவது?" – அமைச்சர் டக்ளஸை நோக்கிக் கஜேந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், கஜேந்திரன் எம்.பி.யின் உரைக்கான நேரம் முடிவடைந்து விட்டது என்று சபைக்குத் தலைமை தாங்கிய எம்.பி. அறிவித்துவிட்டு அடுத்ததாக அலவத்துவல எம்.பியைப் பேசுமாறு அழைத்தார். இதையடுத்து அவர் பேச எழுந்தபோது அவர் பேச முடியாதளவுக்கு கஜேந்திரன் எம்.பிக்கும் டக்ளஸ் தேவானந்தா மற்றும் திலீபன் எம்.பிக்கும் இடையில் சபை அதிரும் வகையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது இரு தரப்பினரும் சபைக்கு உதவாத வார்த்தைகளைத் தாராளமாகப் பயன்படுத்தினர். இதனை ஏனைய எம்.பிக்கள் வேடிக்கை பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தனர். இவர்களைக் கட்டுப்படுத்துமாறு அலவத்துவல எம்.பி. பல தடவைகள் சபைக்குத் தலைமை தாங்கிய எம்.பி.யிடம் வலியுறுத்திய நிலையில் அவர் கட்டுப்படுத்த முயன்றும் முடியவில்லை. இரு தரப்பும் தங்களையும் சபையையும் மறந்த நிலையில் சொற்போரில் ஈடுபட்டனர். பின்னர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சபைக்குத் தலைமை தாங்கியவர் இவர்களைக் கட்டுப்படுத்தினார்.

## மன்னாருக்குச் சீனத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவுப் பொதிகளைச் சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் வழங்கி வைத்தனர்.

மேற்படி உதவித் திட்டம் சீனாவின் பௌத்த சங்கம், இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மீனவக் குடும்பங்கள், தள்ளாடி இராணுவ 541 ஆவது படைப்பிரிவு அதிகாரி, அருட்தந்தையர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் தீவிரவாதம் வலுவடையும்!



## - பிரதமர் மோடி விமர்சனம்

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பயங்கரவாதமும், நக்சல் தீவிரவாதமும் வலுவடையும் என பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

சத்தீஸ்கரில் இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ள சூரஜ்பூர் நகரில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பழங்குடி மக்களின் நலனில் காங்கிரஸ் கட்சி எவ்வித அக்கறையையும் காட்டவில்லை.

பழங்குடி மக்களின் குழந்தைகளின் கல்வி குறித்த எவ்வித சிந்தனையும் அந்த கட்சிக்கு இருக்கவில்லை. ஆனால், பழங்குடி மக்களின் நலனில் பா.ஜ.க. எப்போதுமே அக்கறையுடன் இருந்து வருகிறது. பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் நாட்டின் குடியரசுத் தலைவராக வருவார் என உங்களில் யாராவது நினைத்துப் பார்த்தது உண்டா? ஆனால், பா.ஜ.க. அதனை நிகழ்த்திக் காட்டி இருக்கிறது.

திரவுபதி முர்மு குடியரசுத் தலைவராக ஆகிவிடக் கூடாது என காங்கிரஸ் முயன்றது. அவர் குடியரசுத் தலைவராவதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என அது பாடுபட்டது. ஆனால், பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் நாட்டின் குடியரசுத் தலைவராக வேண்டும் என்பதை உறுதிப்படுத்திய கட்சி பா.ஜ.க.

காங்கிரஸ் கட்சி எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம், பயங்கரவாதிகள் மற்றும் நக்சல் தீவிரவாதிகளின் துணிச்சல் அதிகரிக்கிறது. நக்சல் தீவிரவாதிகளால் ஏற்படும் வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் காங்கிரஸ் தோல்வி அடைந்துவிட்டது. சமீப காலங்களில் நக்சல் தீவிரவாதத்துக்கு பா.ஜ.கவைச் சேர்ந்த பலர் இரையாகி இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்புகூட பா.ஜ.க. பிரமுகர் ஒருவர் நக்சல் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதேபோல், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மனிதர்களைக் கடத்தி பணம் பறிப்பது, போதைப் பொருள் வியாபாரம் ஆகியவை அதிகரிக்கின்றன. நமது சகோதரிகளும், மகள்களும் அதற்கு இலக்காகிறார்கள். பழங்குடி குடும்பங்களைச் சேர்ந்த பல பெண் குழந்தைகள் காணாமல் போகின்றனர். இதற்கு காங்கிரஸ் தலைவர்களிடம் எந்த பதிலும் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. கொடி, பெயரை பயன்படுத்த பன்னீர்செல்வத்துக்கு இடைக்காலத் தடை

## - சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

அ.தி.மு.க. பெயர், கொடி மற்றும் சின்னத்தை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த தடை கோரி எதிர்க்கட்சி தலைவரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் அவர், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என என்னை உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளன. இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் என்னை அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் என கூறிவருவதுடன், அ.தி.மு.கவின் பெயர் மற்றும் கொடியை பயன்படுத்தி வருகிறார்.

இதனால் தொண்டர்களிடையே குழப்பம் நிலவி வருகிறது. எனவே அ.தி.மு.க. பெயர், கொடி மற்றும் சின்னத்தை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் பதில்மனு தாக்கல் செய்ய அவகாசம் வேண்டும் என ஓ. பன்னீர் செல்வம் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து, இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் நேற்று வரை தள்ளிவைத்தது.

அதன்படி, இந்த வழக்கு மீண்டும் நீதிபதி சதிஷ்குமார் முன்பு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது கட்சியில் இருந்து நீக்கப்பட்டும் அதே பதவியை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்தி வருகிறார் என எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் வாதிடப்பட்டது. அதையடுத்து எத்தனை முறை இப்படி வழக்கு தொடர்வீர்கள்? நேரம் கேட்பீர்கள்? எத்தனை முறை ஒரே வாதத்தை வைப்பீர்கள்? என நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அதனை தொடர்ந்து அ.தி.மு.க. பெயர், கொடி, சின்னம், கடித தலைப்பு ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்திற்கு இடைக்கால தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# நாடாளுமன்றத்தில் ம.நீ.ம. குரல் ஒலிக்க வேண்டும்: கமல்ஹாசன்

நாடாளுமன்றத்தில் மக்களின் குரல் கேட்க வேண்டும். அது மக்கள் நீதி மய்யத்தின் குரலாக இருக்க வேண்டும் என பிறந்தநாள் விழாவில் கட்சியினரிடையே கமல்ஹாசன் பேசியுள்ளார்.

மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் கமல்ஹாசனின் பிறந்த நாள் சென்னையில் நேற்று கொண்டாடப்பட்டது. இதில் பங்கேற்று கட்சியினரிடையே உரையாற்றிய கமல்ஹாசன், நாடாளுமன்றத்தில் மக்களின் குரல் கேட்க வேண்டும். அது மக்கள் நீதி மய்யத்தின் குரலாக இருக்க வேண்டும். அதை நோக்கி நகரந்துகொண்டிருக்கிறோம். அதற்கான எல்லா முனைப்பையும் மேற்கொள்ள வேண்டும்.

இன்னும் நிறைய வேலை இருக்கிறது. இன்னும் 100 மடங்கு வேலை காத்திருக்கிறது. அதை உங்களால் செய்ய முடியும். அதற்கான முன்னோட்டம் தான் இது. மிக சிறப்பான சூழல் நம்மை சுற்றி வலம் வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சூழலை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



# காஸாவில் ஒரு மாதத்தில் 10 ஆயிரம் பேர் உயிரிழப்பு!



இஸ்ரேலின் தாக்குதலால் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் காஸாவில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தகவலை பாலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது காஸா தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, பாலஸ்தீன ஆதரவு பெற்ற காஸாவின் ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒரு மாதமாக போர் நீடித்து வருகிறது.

காஸாவில் வான்வழி, கடல் வழி தாக்குதலைத் தொடர்ந்து தற்போது தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தி வருகிறது.

மருத்துவமனைகள், வணிக வளாகங்கள், மருந்தகங்கள் என மக்கள் அதிகம் கூடும் இடங்களை இலக்கு வைத்து தாக்குதல் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10 ஆயிரத்து 328 பேர் பலியாகியுள்ளனர் என பாலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில், 4 ஆயிரத்து 237 பேர் குழந்தைகள்.

காஸாவில் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் ஒரு குழந்தை கொல்லப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரஃபா எல்லை வழியாக காஸாவிலிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

எகிப்தின் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் உடனான உடன்படிக்கையின் பேரில், வெளிநாட்டு கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள், காயமடைந்த பாலஸ்தீனர்கள் ஆகியோர் வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அரசுகள் காஸாவில் சிக்கியிருந்த தங்கள் நாட்டு மக்கள் ரஃபா எல்லை வழியாக வெளியேறி இருப்பதை உறுதி செய்துள்ளன.

கடந்த வார இறுதியில் அல்-ஷிபா மருத்துவமனை வளாகத்தின் முன் நோயாளிகளை ஏற்றிச்செல்லவிருந்த அவசர ஊர்திகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து வார இறுதியில் இந்த எல்லை மூடப்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் திறக்கப்பட்ட எல்லை வழியாக ஆயிரக் கணக்கில் மக்கள் வெளியேறும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் களமிறங்குகிறார் புடின்

ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இந்த நிலையில் மீண்டும் போட்டியிட தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முடிவு செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஆளும் சுதந்திர கட்சியை சேர்ந்த விளாடிமிர்புடின் ரஷ்யாவின் 71 ஆவது ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜனாதிபதியாக இருந்த போரிஸ் யெல்ட்சின் பதவி விலகவே தற்காலிக ஜனாதிபதியாக விளாடிமிர்புடின் பதவி ஏற்றார்.

விளாடிமிர் புடின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதையடுத்து 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு ரஷ்ய ஜனாதிபதியானார். அப்போது நான்கு ஆண்டுக்கு ஒரு முறை ஜனாதிபதி தேர்தல் நடைமுறை விதியை ஆறு ஆண்டுக்கு ஒரு முறை என மாற்றியிருந்தார்.



தொடர்ந்து 2012, 2018 ஆம் ஆண்டுகளில் நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் புடினே வெற்றிபெற்றார்.

இந்த நிலையில் தேர்தலில் பல்வேறு முறைகேடு செய்து தான் புடின் வெற்றி பெற்றார் என ரஷ்ய எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியிருந்தன.

இந்த நிலையில் புடினின் ஜனாதிபதி பதவிகாலம் நிறைவடைகிறது.

இதையடுத்து 2024 ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிட புடின் முடிவு செய்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன் மூலம் 6 ஆவது முறையாக ஜனாதிபதியாக பதவியேற்று 2030 வரை ஜனாதிபதியாக புடின் தொடர்வார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மதுரங்குளியில் இளம் பெண் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரெட்பானா – புழுதிவயல் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நண்பகல் 11.30 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலாவி – புழுதிவயல், ரெட்பானா பகுதியைச் சேர்ந்த குப்பை மரிக்கார் பாத்திமா சாபிகீன் (வயது 38) எனும் ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டில் மின்சாரத் தேவைக்காக மின் வயரை எடுத்து கையாளுகையிலேயே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு அவர் உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த இளம் பெண்ணை, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்த்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மரண விசாரணையை நடத்தினார். ஜனாஸா மீதான பிரேத பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டது.

மின்சாரம் தாக்கியமையால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கி ஜனாஸா குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டாரவளை - கொழும்பு சொகுசு பஸ்ஸுக்கு அதிவேக வீதியில் கல்வீச்சு; 2 பேருக்குக் காயம்

பண்டாரவளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான சொகுசு பஸ்ஸுக்கு மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டாரவளையில் இருந்து வெலவாய, தனமல்வில ஊடாக தெற்கு அதிவேக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்தத் தாக்குதல் மேற்கொளெப்பட்டுள்ளது. இதன்போது பஸ் சாரதியும், பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இருவரும் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# ஐந்து மதுபான நிறுவனங்கள் 672 கோடி ரூபா வரி நிலுவை

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

ஐந்து மதுபான நிறுவனங்கள் 672 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரித் தொகையை செலுத்தாதுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி ஐந்து மதுபான நிறுவனங்களும் வரி செலுத்த தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் 3 சதவீத வரி மேலதிகமாக விதிக்கப்பட்டுள்ளதால் தாமதக் கட்டணமாக 400 கோடி ரூபா வசூலிக்



கப்படவுள்ளது.

வரி செலுத்தாமைக்காக அந்நிறுவனங்கள் மூடப்படுமானால் அரசுக்கு செலுத்தவேண்டிய வரித்தொகையை வசூலிக்க முடியாது. எனவே அந்நிறுவனங்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 29ஆம் திகதிவரை வரியை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அந்நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திர காலம் நீடிக்கப்படமாட்டாது. சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இம்முறையே மதுவரி மோசடியைத் தடுப்பதற்கு அதிக காலம் எடுத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் மதுபான போத்தல்களுக்கான ஸ்டிக்கர்களை அறிமுகப்படுத்துவது ஒரு புரட்சிகரமான விடயமாகும். எனினும் அதில் சில சிக்கல்கள் உள்ளன. சரியான முறையில் ஸ்டிக்கர்கள் அறிமுகப்படுத்தப்பட்டால் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் – என்றார்.



# கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் கடும் மழை: பிரதான வீதிகளில் போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது.

பலத்த மழையுடன் கடும் காற்றும் வீசியதை அடுத்து, மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால், கொழும்பின் பல பிரதான வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிமடைந்திருந்தது.

மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால்,கொழும்பு - டுப்ளிகேஷன் வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இரண்டு வாகனங்களின் மீது மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. எனினும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதனிடையே , கொழும்பு 07 - பௌத்தாலோக மாவத்தையில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில், போக்குவரத்தில் இடையூறு ஏற்பட்டது.

அத்தோடு, மாளிகாவத்தை, டேம் ஸ்ட்ரீட், பொரளை, கொட்டாஞ்சேனை உள்ளிட்ட பல பகுதிகளின் பிரதான, குறுக்கு வீதிகளிலும் மரங்கள் மற்றும் கிளைகள் முறிந்து வீழ்ந்ததமையினால், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது.

மருதானைக்கும் பேஸ்லைன் வீதிக்கும் இடையில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் களனிவெளி மார்க்கத்தில் ரயில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதன் காரணமாக களனிவெளி மார்க்கம் உள்ளிட்ட அனைத்து மார்க்கங்களிலும் ரயில் சேவைகள் தாமதமடைந்துள்ளன என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# களஞ்சியசாலைகளில் நெல் மாயம் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு!



குருநாகல் மாவட்டத்தில் உள்ள நான்கு அரச களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல் காணாமற்போனமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொடவினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய, 2021 -2022 ஆம் ஆண்டுகளில் குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல, ஆனமடுவ, நிக்கவரெட்டிய மற்றும் மஹவ களஞ்சியசாலைகளில் இருந்து 9 லட்சத்து 71 ஆயிரத்து 50 கிலோகிராம் நெல் காணாமற்போயுள்ளது. இதன் பெறுமதி சுமார் 10 கோடி ரூபாவாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 05 அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நெல் காணாமற்போனமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள களஞ்சியசாலைகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறியுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



# ரயில் சேவைகள் பாதிப்பு

மழையுடனான காலநிலை காரண மாக நேற்று மாலை முதல் ரயில் பாதை சமிக்ஞை சேவை பாதிக்கப்பட்டுள்ளதா கவும் இதனால் அனைத்து சேவைகளும் தாமதமடைந்துள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மருதானை மற்றும் பேஸ்லைன் ரயில் நிலையங்களுக்கு இடையிலான ரயில் பாதையில் மர மொன்று வீழ்ந்துள்ளமையினால் களனிவெளி ரயில் பாதையின் போக்கு வரத்தும் தடைப்பட்டுள்ளது.

# விசேட தேவையுடையோருக்கு தனியான அடையாள அட்டை



விசேட தேவையுடையோர் வாக் களிப்பதற்காகத் தனியான அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வேலைத்திட்டமானது அடுத்த 5 வருடங்கள் முடிவதற்குள் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகை யில் இந்த வருடம் விசேட தேவையுடை யோர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு காணப்படுகிறது. 18 வய துக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்குவது தேர்தல்கள் திணைக்களத்தின் பொறுப் பாகும் எனவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.


இந்த முன்னோடி திட்டம் தொடர்பாக 10 மாவட்டங்களில் இருந்து 500 விசேட தேவையுடையோர் தெரிவு செய்யப்பட்டு இந்த ஆண்டு 5000 பேருக்கு அடையாள அட்டை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவுன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலுக்கு இலங்கை பணியாளர்களை இணைத்துக் கொள்ளப் புதிய ஒப்பந்தம்!

இஸ்ரேலின் விவசாயத் தொழிற் துறைக்கு 10 ஆயிரம் இலங்கைப் பணியாளர்களை இணைத்துக் கொள் வதற்கான புதிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என அந்த நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள் ளது.

இஸ்ரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மோஷே ஆபெலுக்கும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டாரவுக்கும் இடையில் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சில் வைத்து இந்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி



ஆரம்பித்த தாக்குதலுடன் அந்த நாட்டின் விவசாயத் துறை கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளது.

இதன்படி, இந்த உடன்படிக்கையின் பிரகாரம் 10 ஆயிரம் இலங்கைத் தொழிலாளர்களை உடனடியாக விவசாயக் கைத்தொழில் சேவை களுக்காக இஸ்ரேலில் பணியமர்த் துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள் ளது.

# தபால் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு




தபால் ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துக் களத்தில் குதித்துள்ளனர்.

நேற்று (07) நள்ளிரவு முதல் 48 மணித் தியாலங்களுக்கு பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் என இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜகத் மஹிந்த தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவிலுள்ள பிரதான தபால் நிலையத்தை ஹோட்டலொன்றுக்கு வழங்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகிறது என அவர் கூறியுள்ளார்.



# பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு!

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளன.

தெதுரு ஓயா, ராஜாங்கணை, அங்கமுவ, உடவளவை, தப்போவ உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளே தொடர்ந்தும் திறந்துவிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, நீர்த்தேக்கங்களின் அருகில் மற்றும் அதன் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எஸ்.பீ.சி சுகீஸ்வர இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

# சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை மானியமாக வழங்குவதற்கு முடிவு

கடந்த சிறுபோக பயிர்ச்செய்கையின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பெரும்போகத்திற்காக எரிபொருளை மானியமாக வழங்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்த விவசாயிகளுக்கு 17 ஆயிரம் ரூபா பெறுமதியான எரிபொருள் மானியமாக வழங்கப்படவுள்ளது என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாவுக்கு மேலதிகமாக இந்த மானியம் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் வறட்சியான காலநிலை காரணமாக 65 ஆயிரம் ஏக்கர் விவசாயக்காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாய அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# ஒட்டுசுட்டான் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமளங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலே மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுங்கேணியில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனமும், ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்று



கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியுள்ளன.

இதன்போது ஒலுமடு, நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய பழனியாண்டி தியாகராசா என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பாக ஹயஸ் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அவிசாவளை வீடொன்றில் இளைஞரின் சடலம் மீட்பு!

அவிசாவளை, ஹ°லத்துவ, பிரதேசத்தில் வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்தார் என்று சந்தேகிக்கப்படும் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 22 வயதான ஹ°லத்துவ, கத்தாதெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இது தொடர்பில் கிடைத்த தகவலின் பிரகாரம், அவிசாவளை பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த இளைஞர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மரணம் தொடர்பான நீதிவான் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உளுந்து, கௌப்பி, பயறு இறக்குமதிக்கு யோசனை

## அமைச்சரவையிடம் கோரிக்கை சமர்ப்பிப்பு

உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களை இறக்குமதி செய்வது குறித்து உணவு பாதுகாப்பு குழுவிடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தானியங்களை மீள இறக்குமதி செய்ய அமைச்சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதால் உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதாகவும், தற்போது மக்களின் நுகர்வு அதிகரித்துள்ளதால், இறக்குமதி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

தற்போதைய தட்டுப்பாடு காரணமாக இந்த தானியங்களின் விலை அதிகரித்து காணப்படுகின்றது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## நிகழ்நிலை காப்பு சட்டமூலம்:

# உயர்நீதிமன்றின் நிலைப்பாடு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இதனை அறிவித்துள்ளார்.

இதன்படி, நிகழ்நிலை காப்பு சட்டமூலம் அல்லது அதன் விதிகள் அரசமைப்பிற்கு முரணானவை அல்லவெனவும், 30 சரத்துகள் மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட வேண்மென வும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அறிவித்துள்ளார்.

மறுசீரமைப்புகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் எனவும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2023


மேஷம்

இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.


ரிஷபம்

இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப் படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபட்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப் படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


மிதுனம்

உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதி யின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.


கடகம்

இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.


சிம்மம்

இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாத கமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்ய மாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.


கன்னி

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணை யுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரிய மானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.


துலாம்

இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.


விருச்சிகம்

இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பொறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2023




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவு களை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும்அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது.

இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்டமிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.








# போராடி ஆஸியை காத்த மேக்ஸ்வெல்

மும்பை,நவம்பர்08

உலகக் கோப்பை தொடரின் 39 ஆவது லீக் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி, ஆப்கானிஸ்தான் அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் குர்பாஸ் 21 ஓட்டங்களில் அவுட்டானார். அடுத்து இறங்கிய ரஹ்மத் ஷா 30 ஓட்டங்களும் கேப்டன் ஹஷ்மதுல்லா ஷஹிதி 26 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அஸ்மதுல்லா ஒமர்சாய் 22 ஓட்டங்களிலும், முகமது நபி 12 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும், மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் இப்ராகிம் ஜட்ரன் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார். இதன் மூலம் உலகக் கோப்பையில் சதம் விளாசிய முதல் ஆப்கானிஸ்தான் வீரர் என்ற பெருமையை இப்ராகிம் ஜட்ரன் பெற்றார். இதற்கு முன்னதாக ஆப்கானிஸ்தான் வீரர் சமியுல்லா ஷின்வாரி உலகக் கோப்பையில் 96ஓட்டங்கள் எடுத்திருந்ததே தனிநபர் அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது.

இறுதியில், ஆப்கானிஸ்தான் 5 விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக இப்ராகிம் ஜட்ரன் 129 ஓட்டங்களும், ரஷித் கான் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து, 292 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. முதலாவதாக களமிறங்கிய வார்னர், ஹெட் ஜோடியில் ஹெட் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், அடுத்து களமிறங்கிய மிட்டெல் மார்ஷ் 24 ஓட்டங்களும், டேவிட் வார்னர் 18 ஓட்டங்களும், ஜோஷ் இங்லிஸ் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், லபுஸ்சேன் 14 ஓட்டங்களும், மார்கஸ் ஸ்டோனிஸ் 6 ஓட்டங்களும், மிட்செல் ஸ்டார்க் 3 ஓட்டங்களும் எடுத்து ஆப்கானிஸ்தான் அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதனால் ஆஸ்திரேலிய அணி 91 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இதன்பின்னர் மேக்ஸ்வெல் மற்றும் கேப்டன் பேட் கம்மின்ஸ் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். ஒருபுறம் கம்மின்ஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தநிலையில், மறு புறம் மேக்ஸ் வெல் ருத்ர தாண்டவம் ஆடினார். விரைவாக அரைசதம் கடந்த அவர் அணியின் ஓட்ட வீதத்தை வேகமாக உயர்த்தினார். தொடர்ந்து ஆப்கான் அணியின் பந்து வீச்சை சிதறடித்த அவர், தனது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

தசைப்பிடிப்பால் அவதியடைந்த மேக்ஸ்வெல் விரைவில் விக்கெட் இழப்பார் என்று எண்ணியிருந்த ஆப்கான் வீரர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வலியால் அவதியடைந்தாலும் பந்துகளை பறக்கவிட்டு வாணவேடிக்கை காட்டினார்.



ஆப்கானிஸ்தான் பந்து வீச்சாளர்கள் அவரது விக்கெட்டை எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. தொடர்ந்து அதிரடி காட்டிய அவர் தனது இரட்டை சதத்தினை பதிவு செய்து அசத்தினார்.

முடிவில் ஆஸ்திரேலியா அணி 46.5 ஒவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்கள் எடுத்தது. இறுதியில் மேக்ஸ்வெல் 128 பந்துகளில் 201 ஓட்டங்களும், பேட் கம்மின்ஸ் 12 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்று அரையிறுதி போட்டிக்கான தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டது.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 1.376 |
| 03 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 0.861 |
| 04 | நியூஸிலாந்து | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | 0.398 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.338 |
| 07 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.142 |
| 08 | இலங்கை | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.160 |
| 09 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.398 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.504 |